# தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர்-இணையம் பிரிவில் புதுமையான மாற்றங்களை உருவாக்க 'ஃபிளிப்கார்ட் லீப்' என்னும் தனது ஸ்டார்ட்அப் துரிதப்படுத்தல் திட்டத்தை ஃபிளிப்கார்ட் அறிமுகப்படுத்தியுள்ளது

- *ஃபிளிப்கார்ட் லீப் இன்று முதல் உள்ளீடுகளுக்கான அழைப்போடு துவங்குகிறது மற்றும் துடிப்பான ஸ்டார்ட்-அப் சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக மற்றும் 'ஸ்டார்ட்-அப் இந்தியா'விற்கு ஆதரவை வழங்கும் வகையில் புதுமையான ஸ்டார்ட்-அப்களை அடையாளம் காணும்*
- *தேர்ந்தெடுக்கப்படும் ஸ்டார்ட்-அப்கள் ஒரு 16-வார வழிகாட்டல் திட்டத்திற்கு உட்படுத்தப்படுவர் மற்றும் 25,000 டாலர் ஈக்விட்டி-இல்லாத மானியத்தை வெல்வர்*

**பெங்களூரு - ஆகஸ்ட் *10, 2020*:** இந்தியாவின் உள்நாட்டு இ-காமர்ஸ் சந்தையான ஃபிளிப்கார்ட், புதிய மற்றும் வளர்ந்து வரும் ஸ்டார்ட்-அப்ங்களுக்கு வளரவும், அளவிடவும், சவால்களை வழிநடத்தவும், இதையொட்டி இந்தியாவின் தொழில்முனைவு சூழலமைப்பிற்கு பங்களிக்கவும் மற்றம் 'ஸ்டார்ட்-அப்' இந்தியாவை ஊக்கப்படுத்தவும் உதவும் 'ஃபிளிப்கார்ட் லீப்' – என்னும் நிறுவனத்தின் முதல் ஸ்டார்ட்-அப் துரிதப்படுத்தல் திட்டத்தை அறிமுகப்படுத்துவதை இன்று அறிவித்துள்ளது. இன்று துவங்கும் அழைப்புக்கான உள்ளீடுகளுடன், *ஃபிளிப்கார்ட் லீப்* பி2சி மற்றும் பி2பி ஸ்டார்ட்-அப்ங்களை அடையாளம் கண்டு, 16 வார தீவிர மெய்நிகர் திட்டத்தின் மூலம் அளவிட உதவும். திட்டம் முழுவதும், வணிகம், செயல்பாடுகள், தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஃபிளிப்கார்ட்டின் தலைமை மேலதிகமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டார்ட்-அப்ங்களுக்கு வழிகாட்டும் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளும். இதில், தொழில் வல்லுநர்கள் வழங்கும் மாஸ்டர் வகுப்பு அமர்வுகளும் உட்படும்.

ஸ்டார்ட்-அப்கள் ஒரு உலகத்தரம்-வாய்ந்த, மதிப்பு-உந்தல் கொண்ட தயாரிப்புகளை உருவாக்க ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு உதவும் சந்தை-தயார் தீர்வுகளை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் வகையில், உலகத்தரம் வாய்ந்த கருவிகள், கட்டமைப்பு, அறிவு மற்றும் சூழல் அமைப்பை வழங்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஃபிளிப்கார்ட்டின் உயர்மட்ட வழிகாட்டிகளின் தொழில்நுட்பம் மற்றும் ஆழ்ந்த தொழில் நிபுணத்துவத்தின் உதவியுடன், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மாறும் தொழில்நுட்ப சந்தையில் போட்டித்தன்மையுடன் இருக்க நுண்ணறிவுகளையும் கற்றல்களையும் சேகரிக்கும். ஃபிளிப்கார்ட் லீப் தொடர்புடைய உயர் திறன் கொண்ட ஸ்டார்ட்-அப்ங்களை குறுகிய பட்டியலிட ஐந்து கருப்பொருள்களை அடையாளம் கண்டுள்ளது. *டிசைன் & மேக் ஃபார் இந்தியா, டிஜிட்டல் வர்த்தகத்தில் புதுமை, சில்லறை சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள், சப்ளை செயின் மேனேஜ்மென்ட் & லாஜிஸ்டிக்ஸ் மற்றும் தொடர்புடைய டீப் டெக் செயலிகளை இயக்குதல்* ஆகியவை இதில் அடங்கும். இந்திய நுகர்வோருக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் இணைய இடத்தில் மிகவும் புதுமையான தீர்வுகளை வழங்கிடும் வகையில் இந்த கருப்பொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த கருப்பொருள் பகுதிகளில் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் கொண்டுவருவதன் மீதான கூர்நோக்கம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மின் வணிகத்தின் தன்மையையே மாற்றும் திறன் கொண்ட புரட்கிசரமான தீர்வுகளுக்கு செயலாற்றும் எந்தவொரு ஸ்டார்ட்-அப்களையும் உள்ளடங்கும்.

இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த, ஃபிளிப்கார்ட் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கல்யாண் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், "ஃபிளிப்கார்ட்டுக்கான பயணம், அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மிகவும் விரும்பப்படும் உள்நாட்டு பிராண்டுகளில் ஒன்றாக மாறியது வரை, இந்தியாவில் ஸ்டார்ட்-அப் சூழல் அமைப்பின் ஆற்றலுக்கான ஒரு உண்மையான முன்னோடியாக இருந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் தொழில்நுட்பத் துறையில் புதுமைகளும், புரட்சிகளும் அறிமுகமாகி வருவதால், அளவிடுதலில் முன்னணியில் இருக்க நாங்கள் விரும்புகிறோம், மேலும் இந்த ஸ்டார்ட்-அப்கள் தொழில் மற்றும் இந்திய நுகர்வோருக்கு மதிப்பு அளிக்க உதவுகின்றன. ஃபிளிப்கார்ட் லீப் இந்த திறனைக் கண்டறிவதையும், உள்ளூர் தொழில்முனைவோர் சூழல் அமைப்பில் புதுமை, ஆர்வம் மற்றும் வழக்கத்திற்கு மாறான தன்மையைக் கொண்டுவரும் புதிய யோசனைகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் அரசாங்கத்தின் 'ஸ்டார்ட்-அப் இந்தியா' முயற்சியையும் இது மேம்படுத்தும்" என்று கூறினார்.

மேலும், **ஃபிளிப்கார்ட்டின் தலைமை தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப அதிகாரி ஜெய் வேணுகோபால்** அவர்கள், "பல ஆண்டுகளாக இந்தியாவில் ஸ்டார்ட்-அப் சூழல் அமைப்பின் மாற்றம் நாடு சில சிறந்த ஸ்டார்ட்-அப்

பயணங்களுக்கு தாயகமாக மாற வழி வகுத்துள்ளது. தங்கள் தீர்வுகளை சந்தையில் கொண்டு வருவதற்கு மேலேயும் அதற்கு அப்பாலும் செல்லும் தொழில்முனைவோரின் ஆற்றல்கள் வளர்ந்து வருகிறது. அந்த கட்டத்திற்கு உட்பட்டு, தனது சொந்த வெற்றிகரமான பிளேபுக்கை உருவாக்கிய ஒரு நிறுவனம் என்ற வகையில், இந்த ஆரம்ப கட்டங்களில் ஸ்டார்ட்-அப்களுக்கு எதிர்காலத்தில் வளர்ச்சியடைந்து வெற்றிகரமான பிராண்டுகளாக மாற உதவும் ஒரு திட்டத்தை உருவாக்க எங்கள் நெட்வொர்க்கைப் பயன்படுத்த விரும்பினோம்." என்று கூறினார்.

இந்த திட்டம், நரேன் ரவுலா தலைமையிலான ஃபிளிப்கார்ட்டின் தயாரிப்பு வியூகம் மற்றும் அமலாக்கக் குழுவால் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் நிர்வகிக்கப்படும். ஃபிளிப்கார்ட் வர்த்தக நிறுவனங்கள் (ஃபிளிப்கார்ட் & மின்த்ரா) மற்றும் பரந்த சூழல் அமைப்புக்குள் புதுமைகளை வழிநடத்த இந்த குழு பொறுப்பு வகிக்கிறது.

இந்தியாவிற்காக மட்டுமின்றி, பாரத பயனர்களுக்கும் (முதன்மையாக அடுக்கு 2 மற்றும் 3+ நகரங்களை அடிப்படையாகக் கொண்டவர்கள்) புதுமைகளைக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துவதன் மூலம், ஜின்னோவ் உடன் இணைந்து வடிவமைக்கப்பட்ட இந்த 16 வார வேலைத்திட்டம், ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு அவர்களின் புதுமையான தீர்வுகளை சந்தைக்குத் - தயாரானதான உருவாக்கும் வாய்ப்புகளைத் தரும் மற்றும் $ 25,000 ஈக்விட்டி இல்லாத மானியத்தை வெல்லவும் அவர்களை அனுமதிக்கும். *ஃபிளிப்கார்ட் லீப்பிற்கு* விண்ணப்பிக்கும் ஸ்டார்ட்-அப்கள் இந்தியாவை சார்ந்ததாக இருக்க வேண்டும் மற்றும் ஆரம்ப அமலாக்க அளவீடுகளுடன், செயல்படும் ஒரு வடிவாக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும். திட்டம் முடிந்தபின், *ஃபிளிப்கார்ட் லீப்பின்* இறுதி பங்கேற்பாளர்கள் டெமோ நாளில் முதலீட்டாளர்கள், கார்ப்பரேட்டுகள் மற்றும் பிற சூழல் அமைப்பின் முக்கியஸ்தர்களுக்கு, அவர்களின் வெற்றிகரமான மாதிரியைத் வழங்குவார்கள் மற்றும் அது ஃபிளிப்கார்ட்டின் நிதியுதவிக்காகவும் கருதப்படும்.

தொழில்துறை அறிக்கையின்படி, இந்தியா தற்போது உலகின் 3 வது பெரிய ஸ்டார்ட்-அப் சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது மற்றும் அதன் நிலையான வருடாந்திர வளர்ச்சி 12-15% ஆகும். உண்மையில், அறிக்கையின்படி, இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 2-3 தொழில்நுட்ப ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பிறக்கின்றன. வளர்ந்து வரும் சூழல் அமைப்பு கடந்த சில ஆண்டுகளில் சில சிறந்த ஸ்டார்ட்-அப் பயணங்களுக்கு வழிவகுத்துள்ளது. மத்திய மற்றும் மாநில மட்டங்களில் வளர்ந்து வரும் அரசாங்க ஆதரவு மற்றும் தொடங்குவதற்கான மேம்பட்ட ஒழுங்குமுறைச் சூழலுடன், இந்த பிரிவு அடுத்த பில்லியன் நுகர்வோரைத் திறம்படக் கைபற்றும் வகையில் தயாராக உள்ளது.

ஃபிளிப்கார்ட் லீப் குறித்த கூடுதல் தகவல்களுக்கு மற்றம் விண்ணப்பிக்க, பார்க்கவும்: https://www.flipkartleap.com/

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். 2007 – ம் ஆண்டு, பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட்; வழங்கி வருகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. ஃபிளிப்கார்ட் ஹோல்சேல் என்னும் எங்கள் புதிய டிஜிட்டல் சந்தையிடத்தின் சமீபத்திய அறிமுகம், இந்தியாவிலுள்ள கிராணாக்கள் மற்றும் MSME-க்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான எங்களது உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாதாரமாகும். கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

மேலும் அதிக தகவல்களுக்கு, மின்னஞ்சல் அனுப்பவும்: media@flipkart.com